*1973 ஆகஸ்ட் 4]* *[பேரவைத் தலைவர்]*

அப்படிப் பேசக்கூடாது என்று உங்கள் கட்சித் தலைவராலேயே, அவர் பேரவைத் தலைவராக இருந்தபொழுது, தீர்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. நீங்கள் விதி 45-ன் கீழே பேசுகிறேன் என்று எழுந்துவிட்டு இப்பொழுது முதலமைச்சர் இதைப்பற்றி பேசலாமா என்று கேட்பதுதான் பாயின்ட் ஆப் ஆர்டரா? அது பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை. அவர் பேசலாம்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : The whole thing is absolutely in your discretion, Sir. I am only coming to your rescue, Sir.

* **மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சிகளினுடைய தலைவர்களும், உறுப்பினர்களும் கொடுத்துள்ள இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தின்மீது உணவு அமைச்சர் அவர்கள் பல விளக்கங்களை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். முதலிலே கன்னியாகுமரி மாவட்டத்திலே ஆண்டொன்றுக்கு ஏறக்குறைய ஒன்றரை லட்சம் டன் அரிசி உற்பத்தி செய்யப்படுவதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. அங்குள்ள மக்கள் அனைவருமே அரிசியை உண்பவர்கள் என்று கணக்கு எடுத்துக் கொண்டாலும் தேவை ஆண்டொன்றுக்கு ஏறக்குறைய ஒரு லட்சத்துப் பதினைந்தாயிரம் டன்களுக்கு மேற்படாது என்ற விவரம் நம்மிடத்திலே இருக்கின்றது. தேவை ஒரு இலட்சத்துப் பதினைந்தாயிரம் டன்களுக்கு மேற்படாது என்ற நிலையிலே ஒன்றரை இலட்சம் டன்கள் ஆண்டொன்றுக்கு உற்பத்தி செய்யப்படுகிறது என்பதை நாம் ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும். இந்த அடிப்படையிலே இன்றைக்குக் கன்னியாகுமரி மாவட்டத்திலே எழுந்துள்ள பிரச்சினையை அணுகுவது சரியானதாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

இன்றைக்கு அங்கே அரிசி குறித்து, விலையேறி விட்டது என்றும், கிடைக்கவில்லை என்றும் கூறப்பட்டு, சில அரசியல் கட்சிகள் அங்கே போராட்டங்களிலே ஈடுபட்டிருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு பழைய காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் கன்னியாகுமரி மாவட்டம் பழிவாங்கப்படுகிறது என்ற பழிச்சொல்லை இந்த அரசின்மீது தொடர்ந்து சுமத்தி வருகிறார்கள். கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், இந்த அரசு உருவானதற்குப்

பிறகு எந்தெந்த வகையிலே மிக ஆர்வத்தோடு அங்கேயுள்ள பிரச்னைகள் கவனிக்கப்பட்டு வருகின்றன என்பதைப் புள்ளி விவரங்களோடு எடுத்துச் சொல்லமுடியும். அண்மையிலே இரண்டு, மூன்று திங்களுக்கு முன்பு மீனவப் பெருமக்கள் உணவு நிலைமையிலே—வழக்கமாக அவர்கள் புசிக்கின்ற கிழங்குகள் அவர்களுக்குக் கிடைக்காமல் போனபோது—நான்கு வாரங் களுக்கு கிட்டத்தட்ட 18 ஆயிரம் மீனவர்களுக்கு இலவசமாக அரிசி வழங்கப்பட்டிருக்கிறது.

அதுமட்டுமல்லாமல், கன்னியாகுமரி மாவட்டத்தினுடைய நிலத்தீர்வை தமிழ்நாட்டோடு நீண்ட நெடுங்காலமாக இணைக்கப் பட்டு ஒருமித்த ஒருநிலை ஏற்படவில்லை என்ற அந்த மாவட்டத் தினருடைய குறைபாட்டை அண்மையில் போக்கும் முறையிலே சில திருத்தங்களைச் செய்து, தமிழ்நாட்டோடு இணைக்கும் வகையில் அந்த நிலத் தீர்வையை எடுத்த முயற்சியில் ஏற்கெனவே ஐந்தாறு ஆண்டுக்காலமாக விவசாயிகள் கட்ட வேண்டிய பாக்கி ஏறத்தாழ 23 இலட்சம் ரூபாய் இருந்தது. அதைக் கன்னியா குமரி மாவட்டத்திலேயுள்ள விவசாய மக்களுக்குத் தள்ளிக் கொடுத்துவிட வேண்டும், அதை அரசு வற்புறுத்தக் கூடாது என்று சொன்ன அந்த மாவட்ட மக்களின் யோசனையையும் அரசு ஏற்றுக்கொண்டு அதையும் தள்ளிக் கொடுத்திருக்கிறது.

நான் கன்னியாகுமரி மாவட்டத்திற்குச் சென்றபொழுது அங்குள்ள சட்டப்பேரவை உறுப்பினர்கள், மேலவை உறுப் பினர்கள், எல்லாக் கட்சிகளையும் சேர்ந்த ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் என்னைச் சந்தித்தார்கள். நண்பர் ஜேம்ஸ் அவர்களும் சந்தித்தார்கள். சந்தித்து, அங்குள்ள சில இடங்களிலே உணவு பகிர்ந்தளிக்கப்படுவதில்லை என்று சில குறைபாடுகளைச் சொன்னார்கள். நான் அவர்களுக்கு நேராகவே மாவட்ட ஆட்சித் தலைவரை அழைத்து உடனடியாக அனைத்துக் கட்சிச் சட்டமன்ற உறுப்பினர்கள், மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள், மேலவை உறுப்பினர்கள், அங்குள்ள ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் அனைவரையும் கூட்டிவைத்து நீங்கள் ஒரு முடிவு செய்து எந்த வகையிலே அரசு இங்கே இந்த அரிசி நிலைமையிலே நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று எங்களுக்கு எழுதியனுப்புங்கள், நாங்கள் உடனடியாகத் தக்க நடவடிக்கைகளை மேற்கொள்கிறோம் என்று அவர்களிடத்தில் சொல்லிவிட்டு வந்தேன். அதற்குப் பிறகு

1973 ஆகஸ்ட் 4] [டாக்டர் மு. கருணாநிதி]

மாவட்ட ஆட்சித் தலைவரின் முன்னிலையில் எல்லாக் கட்சித் தலைவர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும் ஒருங்குகூடிச் சில முடிவுகளை எடுத்து அரசுக்கு அனுப்பினார்கள். அவைகளைப் பற்றி இங்குள்ள நிலைமைக்கேற்றவாறு அரசாங்கம் நடைமுறைப் படுத்தியது என்பதையும் யாரும் மறுக்க இயலாது. பல்வேறு கோரிக்கைகள் அவ்வப்பொழுது நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. நான் வரிசையாகச் சொல்ல வேண்டுமென்றால், முதலிலே, முறைப்படுத்தப்பட்ட பங்கீட்டு முறை உள்ள இடங்களில் அரிசியின் அளவை வயது வந்தவர்களுக்கு வாரம் ஒன்றுக்கு 1,600 கிராம் ஆகவும், சிறுவர்களுக்கு 800 கிராம் ஆகவும் உயர்த்த வேண்டும் என்ற கோரிக்கை தரப்பட்டது. இக்கோரிக்கையை 1973 மார்ச் திங்களில் இந்த விகிதப்படி முறைப்படுத்தப்பட்ட பங்கீட்டு முறையுள்ள இடங்களில் அரிசி வழங்க வேண்டுமென்று அரசு ஏற்று நடவடிக்கை எடுத்தது. ஆகவே புறக்கணிக்கப் படவில்லை, கோரிக்கைகள் அலட்சியப்படுத்தப்படவில்லை என்பதற்கு இது முதல் உதாரணம்.

பிறகு, அடுத்த கோரிக்கை, நாகர்கோயிலிலிருந்து கல்குளம் வட்டத்திற்குக், கொண்டு வரப்படும் அரிசியின் விலையைச் சீர்படுத்த வேண்டும் என்பது. இந்தக் கோரிக்கையையும் ஏற்றுக் கொண்டு, கோட்டாறுச் சந்தையிலிருந்து கல்குளம் வட்டத்திற்கு எடுத்துச் செல்லப்படும் அரிசி, விற்பனை விலை இவற்றினை நிர்ணயித்தும் அவற்றினைக் குடும்ப அட்டைகள் மூலம் வழங்க ஏற்பாடு செய்யவும் மாவட்ட ஆட்சியாளருக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, அதுவும் நடைமுறைப்படுத்தப்பட்டது.

மூன்றாவது கோரிக்கையாக, முறைப்படுத்தப்பட்ட விநியோக முறையைக் கல்குளம் வட்டம் முழுவதுக்கும் அல்லது பற்றாக் குறையுள்ள கிராமங்களிலாவது விஸ்தரிக்க வேண்டும் என்ற கோரிக்கை இருந்தது. அதற்கும், கல்குளம் வட்டத்தில் நெல் உற்பத்தி செய்கிறவர்கள் தவிர மற்றவர்களுக்குக் குடும்ப அட்டைகள் மூலம் அரிசி வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது.

நான்காவது கோரிக்கை, சுய தேவைக்கு எடுத்துச் செல்லும் சிறு அளவு அரிசி, நெல் ஆகியவற்றிற்கு கட்டுப்பாடு தளர்த்தப் பட வேண்டுமென்பது. அதையும் அரசு ஏற்றுக்கொண்டு, சுய தேவைக்கு எடுத்துச் செல்லும் சிறு அளவு அரிசி, நெல் இவை

களுக்குக் கட்டுப்பாடு தளர்த்தப்பட்டது. ஆனால் இவ்விதம் கொண்டு செல்லும் அரிசி, நெல் அளவினைக் குடும்பக் கார்டுகளில் பதியும்படியும் ஆணையிடப்பட்டது.

இப்படி வரிசையாக ஏற்றுக்கொண்டது மட்டுமல்லாமல், இடையிலே உணவு அமைச்சரவர்களை ஜூன் மாதத்தில் கன்னியா குமரி மாவட்டத்திற்குச் சென்று அவைகளை உடனடியாகக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டேன். அவர்கள் அதிகாரிகளோடு கன்னியாகுமரி மாவட்டத்திற்குச் சென்றார்கள். அங்கேயுள்ள எல்லாக் கட்சிக் சட்டமன்ற உறுப்பினர்கள், பாராளு மன்ற உறுப்பினர்கள், மேலவை உறுப்பினர்கள் ஆகியவர்களோடு கலந்து உணவு அமைச்சரவர்கள் பேசி மிக முக்கியமாக, எல்லையிலும், உள்பகுதியிலும் அமல் செய்யப்படும் போக்கு வரத்துக் கட்டுப்பாடுகள், கேரள மாநிலத்திற்கு அரிசி கள்ளக் கடத்தல் மூலம் கொண்டு செல்வதைத் தடுப்பதற்காக மிக அவசியம் என்றும், அவற்றை நீக்கினால் இம் மாவட்டத்தில் உணவு நிலைமை சீர் அழியும் என்றும் சுட்டிக்காட்டினார். அமைச்சர் வெளியிட்ட கருத்தினை அப்பொழுது சட்ட மன்ற உறுப்பினர்கள் ஏற்றுக்கொண்டார்கள். இப்பொழுதும் கூட பழைய காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினராக உள்ளவர்கள் எல்லையிலே இருக்கும் செக் போஸ்டை எடுக்க வேண்டுமென்ற கோரிக்கையை வைக்கவில்லை. ஆகவே, அமைச்சரின் கருத்து அப்பொழுது ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இதனைத் தொடர்ந்து மேலவை எதிர்க்கட்சித் தலைவர் திரு. ராஜாராம் நாயுடு அவர்களும், திரு. ஜேம்ஸ் அவர்களும் உணவு அமைச்சரைச் சந்தித்து, தற்பொழுது வழங்கப்படும் 1,500 கிராம் அரிசி போதவில்லை என்றும், அதை அதிகரிக்க வேண்டுமென்றும் கூறினார்கள். அதை அரசு உடனடியாக ஏற்று, வயது வந்தவர்களுக்கு 1,800 கிராமும், சிறுவர்களுக்கு 900 கிராமும் வழங்க அதற்கான ஆணையைப் பிறப்பித்தது. ஆகவே, எடுத்து ச்சொல்லும் விஷயம் எதுவும் புறக்கணிக்கப்படவில்லை என்பதற்காகத்தான் இவைகளைக் கோடிட்டுக் காட்டினேன்.

அடுத்து, கார்டுகள் வழங்கப்படுவதில் சீர்திருத்தம் தேவை, கார்டுகள் வழங்கப்படவில்லை என்ற கருத்து சொல்லப்பட்டது. உங்களுக்கு ஒரு விவரத்தைத் சொல்லிக்கொள்ள ஆசைப்படு கிறேன். அங்கு ஜனக்கணக்கெடுப்புப்படி மக்கள் தொகை

*1973 ஆகஸ்ட் 4]* *[டாக்டர் மு. கருணாநிதி]*

12½ இலட்சம் பேர் ஆனால் வழங்கப்பட்ட அட்டைகள்படி மக்கள் தொகை 13¾ இலட்சம் பேர். 12½ இலட்சம் பேர் 13¾ இலட்சம் கார்டுகளைப் பெற்றிருக்கிறார்கள். ஆகவே, அவைகளில் என்னென்ன தவறுகள் ஏற்பட்டிருக்கின்றன என்ற ஆராய்ச்சியில் ஈடுபட்டு இப்பொழுது அந்தக் கார்டுகளில் கிட்டத்தட்ட 10,000 முதல் 12,000 கார்டுகள் வரையில் நீக்கப்பட்டிருக்கின்றன. தொடர்ந்து முயற்சி செய்யப்படுகிறது. 2,000 கிராம் அரிசி கொடுக்கப்பட்டிருக்கிறது என்றாலும், சில இடங்களில் தரப்பட வில்லை, அதற்கு அதிகாரிகளே காரணம் என்றாலும் அவை களெல்லாம் பேசித் தீர்த்துக்கொள்ள வேண்டிய விஷயமே அல்லாமல் போராட்டத்தின்மூலம் தீர்த்துக்கொள்ளப்பட வேண்டிய விஷயம் என்று நான் கருதவில்லை. ஏனென்றால் பல முறை பேசிப்பேசி, நான் பழைய காங்கிரசை மட்டும் சொல்ல வில்லை, அ.தி.மு.க., கம்யூனிஸ்ட் கட்சி, எல்லாக் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் என்னிடத்திலேயும், உணவு அமைச்சரிடத்தி லேயும், அதிகாரிகளிடத்திலேயும் பேசியிருக்கிறார்கள். அந்த வகையில் பேசித் தீர்க்கும் ஒரு பிரச்னையாக நான் இதைக் கருது கிறேன்.

திடீரென்று போராட்டம் தொடங்கியது. அம்மையார் அவர்கள் சொன்னார்கள், சிலரைப் பிடித்து விட்டு விடுகிறார்கள், சிலர் உள்ளயே வைக்கப்படுகிறார்கள் என்று சொன்னார்கள். திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் அப்படியெல்லாம் இல்லை என்று சொன்னார்கள். இப்படி இது இங்கே மட்டும் நடைபெறுவதில்லை, கன்னியாகுமரி மாவட்டத்திலேயும் எதிர்க் கட்சிகளுக்கிடையே இப்படிப்பட்ட ஒரு போட்டியிருக்கிறது. அந்தக் கட்சி சோடையான கட்சி, இந்தக் கட்சி வீரம் நிறைந்த கட்சி என்று நான் குறிப்பிடவில்லை, அப்படிப்பட்ட பிரச்சாரம் அங்கே நடக்கிறது. நேற்று நான் குறிப்பிட்டதைப்போன்று அந்தப் போட்டி அரசாங்கத்தோடு போராடுவதில் யார் தீவிரமாக இருக்கிறார்கள் என்ற நிலைமையை உருவாக்கிவிடுமோ என்று நான் ஐயுறுகின்றேன். முதலிலே 19-ஆம் தேதி போராட்டம், மறியல் போராட்டம் நடை பெற்றது. 19-ஆம் தேதி முதல் 27-ஆம் தேதி வரையில் 117 பேர்கள் கைது செய்யப்பட்டார்கள். அவர்கள் 27-ஆம் தேதி வரையில் சிறையில் வைக்கப்பட்டார்களா என்றால் இல்லை. மறியல் செய்யும் காரணத்தினால் போக்குவரத்திற்கு இடைஞ்சலாகவும், அலுவலகத்திற்கு வருகின்றவர்களுக்கு இடைஞ்

சலாகவும் இருக்கும் என்ற முறையில் உடனடியாக அவர்கள் அகற்றப்பட்டுக் கைது செய்யப்பட்டு, மாலையிலேயோ அல்லது மறுநாள் காலையிலேயோ விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள். அதைப்போலவே திரு. பொன்னப்ப நாடார் போன்ற பழைய காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்களும், அ.தி.மு.க.வைச் சேர்ந்தவர்களும், சுதந்திராக் கட்சியைச் சேர்ந்தவர்களும், சி.பி.எம். கட்சியைச் சேர்ந்தவர்களும். . .

**திரு. கே. ஏ. மதியழகன்:** அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்றுதான் கட்சியிருக்கிறது. திரும்பத்திரும்ப அ.தி.மு.க. என்று சொல்கிறார்களே.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** ஹாண்டே அவர்களும் ஏ.டி.எம்.கே. என்றுதான் சொன்னார்கள்.

**திரு. கே. ஏ. மதியழகன்:** நானும் திருவாரூர் முன்னேற்றக் கழகம் என்று சொல்லுவேன். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்று இருக்கிறது. அ.தி.மு.க. என்று சொல்வது, அதுவும் பெரிய இடத்தில் உள்ள முதலமைச்சர் கூறுவது முறையல்ல. கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள மக்களுக்கு சோறு தான் போடவில்லை என்றாலும் பெயரைச் சாப்பிட்டு விடுகிறீர்களே.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அண்ணாவை நான் சாப்பிடமாட்டேன்.

**திரு. கே. ஏ. மதியழகன்:** சாப்பிட்டுக்கொண்டு இருக்கிறீர்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, நான் பேசிக்கொண்டிருக்கும்பொழுது இவர் பேசுவது என்ன முறை?

**திரு. கே. ஏ. மதியழகன்:** அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்று இருக்கும் ஒரு கட்சியை, அ.தி.மு.க. என்றால் எப்படி?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, திரு. ஹாண்டே அவர்கள் பேசும்பொழுதுகூட ஏ.டி.எம்.கே. என்று குறிப்பிட்டார்கள். அப்பொழுது மதிக்குக் கோபம் வரவில்லை..

*1973 ஆகஸ்ட் 4]*

**திரு. கே. எ. மதியழகன்:** அதையும் திருத்திக்கொள்ள வேண்டியதுதான். என்றாலும் நீங்கள், முதலமைச்சராக இருப்பவர்கள், வெளியிலே எப்படி வேண்டுமானாலும் சொல்லலாம், இங்கே அப்படிச் சொல்லலாமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** நான் திராவிட முன்னேற்றக் கழகம் என்று சொல்லிவிட்டு உங்களுடைய கட்சியை அப்படிச் சொன்னால் சரி. ஆனால் நான் தி.மு.க. என்றுதான் சொல்கிறேன், அதைப்போல சி.பி.ஐ., சி.பி.எம். என்று சொல்கிறேன், அப்பொழுது யாரும் கோபித்துக் கொள்வது கிடையாது.

காங்கிரஸ் (ஓ) 40, எ.டி.எம்.கே. 55, சுதந்திரா 5, சி.பி.எம். 5, சி.பி.ஐ. 6, ஃப்ரீடம் ஃபைட்டர்ஸ் 6 ஆக, 117 பேர்கள் கைது செய்யப்பட்டார்கள். ஆனால் அவர்கள் உடனடியாக விடுதலை செய்யப்பட்டார்கள்.

அதற்குப் பிறகு, பத்து நாளைக்குப் பிறகு மறுபடியும் போராட்டம் எந்த வகையில் திரும்பியது என்றால் திருநெல்வேலியிலிருந்து சட்ட விரோதமாக அரிசியை எடுத்துச் சென்று கன்னியாகுமரிக்குள்ளே நுழைவது என்ற போராட்டத்தில் ஆளும் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் ஈடுபட்டதுதான் வேதனைக்குரியது. அதிலே ஆளும் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் 19 பேரும், அ.தி.மு.க. வைச் சேர்ந்த 9 பேரும் ஆக 28 பேர் கைது செய்யப்பட்டுத் தொடர்ந்து காவலில் வைக்கப் பட்டிருக்கிறார்கள்.

பயங்கரமான நிலைமையிலிருந்து கன்னியாகுமரி மாவட்டத்தைக் காப்பாற்ற வேண்டும், அதே நேரத்தில் தமிழகத்திலுள்ள எல்லா மாவட்டங்களையும் காப்பாற்ற வேண்டுமென்பதற்காகத்தான் உணவு அமைச்சர் கூறியது போல் திருநெல்வேலி மாவட்ட எல்லையில் செக் போஸ்ட் போடப் பட்டிருக்கிறது. அதே போல் மதுரை மாவட்டத்திலும், கோவை மாவட்டத்திலும் செக் போஸ்ட்கள் போடப்பட்டிருக்கின்றன.

அப்படி செக் போஸ்ட்கள் போடப்பட்டிருக்கின்ற நிலையில் திருநெல்வேலியிலிருந்து நாங்கள் அரிசியைக் கடத்திச் செல்வோம், அதை யாரும் தடுக்கக்கூடாது, செக் போஸ்ட்டை மீறி

நாங்கள் எடுத்துச் செல்வோம் என்ற முறையில் ஆளும் காங்கிரஸ் கட்சி வழி காட்டினார்கள். அதை அங்கிருக்கும் பழைய காங்கிரஸ் கட்சியோ மற்றக் கட்சிகளோ ஏற்றுக் கொண்டதாகத் தெரியவில்லை—எனக்குத் தெரிந்த வரையில் இல்லை. ஏற்றுக் கொண்டார்களோ என்னவோ தெரியாது. இதன் காரணமாக ஆளும் காங்கிரஸ் கட்சி 19 பேரும், அ.தி.மு.க. 9 பேரும் ஆக 28 பேர் கைது செய்யப்பட்டார்கள். கடந்த மாதம் 27 ஆம் தேதிக்குப் பிறகு 3—8—73 வரை மறியலில் ஈடுபட்டவர்களைக் கைது செய்து யாரையும் விடவில்லை என்று சட்ட அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பத்து நாள் வரை அவர்களைக் கைது செய்து விட்டு வந்தோம். அவர்கள் மறுபடியும் தொடர்ந்து அதையே நடத்திக் கொண்டிருந்த காரணத்தால் விடுதலை செய்யவில்லை. காங்கிரஸ் (ஓ) 58 பேர்; அ.தி.மு.க. 17 பேர், சுதந்திரா 9 பேர், கட்சிச் சார்பற்றவர்கள் என்ற பெயரில் 85 பேர் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கைது செய்யப்பட்டு ரிமாண்டில் வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

இதற்கு ஒரு போராட்டம் தேவையா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். தொடர்ந்து பேச்சு வார்த்தை மூலமாக முடிவெடுத்து 1,400 கிராம் அரிசி இன்றைக்கு 2,000 கிராம் என்ற அளவுக்கு உயர்த்தப்பட்டிருக்கிறது. ஆகவே, மீண்டும் பேச்சு வார்த்தைகள் மூலமாகப் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள முடியாதா என்பதையும் யோசித்துப் பார்க்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கள்ளக் கடத்தல்காரர்களைப் பிடிக்க வேண்டுமென்று தமிழ்நாடு கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் மணலி அவர்கள் கூறினார்கள். அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்வேன்—மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டிலேயே நான் திட்டவட்டமாக அறிவித்தேன். உணவுப்பொருள் கடத்தல்காரர்கள் மீது பாதுகாப்புச் சட்டம் பிரயோகிக்கப்பட வேண்டும், அதற்கான வழிவகைகளை ஆராய வேண்டுமென்று சொன்னேன். அதற்கேற்ப கோவை மாவட்டத்தில் 13 பதுக்கல்காரர்கள் இன்றைக்குச் சிறை வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை இந்த அவைக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அது மாத்திரமல்ல. நேற்றையதினம் கன்னியாகுமரி மாவட்டத்தில் மூன்று பேர் கடத்தல்காரர்கள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ்ச்

சிறைப் பிடிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்வேன். இது பதினோரோடு நின்று விடாது. இன்னும் யார் யார் கடத்தல்காரர்களோ அவர்களையெல்லாம் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் பிடிக்க எல்லா முயற்சிகளையும் காவல் துறையினர் நிச்சயமாக எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் அறிவித்து அங்கிருக்கும் குறைபாட்டை எடுத்துச் சொல்லி நிவர்த்திக்கச் சட்ட மன்றம் கூடியிருக்கும் இந்த நேரத்தில் இந்த அரசோடு கலந்து பேச வாய்ப்பு இருக்கும் காரணத்தால் நிவர்த்தித்துக் கொள்ள முடியும் என்று கூறி, இதிலே ஆற அமர உட்கார்ந்து பேசித் தீர்த்துக் கொள்ள வேண்டிய காரியமாக இருக்கின்ற நிலையில் இந்த அவையின் நடவடிக்கைகளை ஒத்தி வைத்து இதை விவாதிக்க வேண்டிய தேவையில்லை, இதை அனுமதிக்கத் தேவை இல்லை என்று கூறி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : உணவு அமைச்சர் அவர்களும் முதலமைச்சர் அவர்களும் கூறிய விளக்கங்களுக்குப் பிறகு இது ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு உரிய முறையில் இல்லாத காரணத்தால் இதற்கு அனுமதி தர மறுக்கிறேன்.

## (7) அரசினர் தனித் தீர்மானம்

**பாராளுமன்ற இரு அவைகளிலும் நிறைவேற்றப்பட்ட 1973 ஆம் ஆண்டு அரசியலமைப்பு (31-வது திருத்த) சட்டமுன்வடிவினால் செய்யக் கருதப்பட்டுள்ள திருத்தங்களை உறுதிப்படுத்துதல்.**

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : பேரவைத் தலைவர் அவர்களே,

> "பாராளுமன்ற அவைகள் இரண்டிலும் நிறைவேற்றப் பட்டு 1973 ஆம் ஆண்டு அரசியல் அமைப்பு (31-வது திருத்த) சட்ட முன்வடிவினால் செய்யக் கருதப் பட்டுள்ளவையும், இந்திய அரசியல் அமைப்பின் 368-வது பிரிவின் (2) பகுதியின் வரம்பு நிபந்தனையின் நோக்கத்தின் கீழ் வருபவையுமான திருத்தங்களை இப்பேரவை இசைவுடன் உறுதிப்படுத்துகிறது"

என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.